

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில், கோணம், அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் ரூ.7.25 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுமான பணிகளை இன்று (08.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். செயற்பொறியாள் பொறி. சேக் அப்துல்காதர் ஒலியுதீன், உதவி செயற்பொறியாளர் பொறி. விஜய ராஜன் ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 424/2016 நாள்: 08.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் கலை மற்றும் அறிவியில் கல்லூரி கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (08.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வியை உயர செய்வதற்காக பள்ளி கல்வித்துறை மற்றும் உயர் கல்வித்துறை சார்பாக, பல்வேறு நலத்திட்ட உதவிகள், கல்வி உபகாரணங்கள் வழங்கி வருகிறார்கள். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மாணவ, மாணவியர்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டத்திற்கு சென்று உயர்கல்வி கற்கும் சூழ்நிலை இருந்து வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதனை கருத்தில்கொண்டும், மாணவ, மாணவியர்களின் பயண சிரமத்தை போக்கிடும்வகையில், நாகர்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி, கோணம் அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் துவங்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. கட்டிட பணிகள் முடியும்வரை, நெசவாளர் தெருவில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் (தற்காலிக இடம்), அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி நடத்திடவும் ஆணையிட்டுளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்களால், 2016-17-ம் கல்வியாண்டில், இளங்கலை பொருளியல் வகுப்புக்கு (B.A. Economics) 64 மாணவ, மாணவியர்களும், இளங்கலை ஆங்கிலம் வகுப்புக்கு (B.A English) 64 மாணவ, மாணவியர்களும், இளங்கலை வணிகவியல் வகுப்புக்கு (B.Com) 64 மாணவ, மாணவியர்களும் என மொத்தம் மூன்று பாடப்பிரிவில் 192 மாணவ, மாணவியர்களின் மதிப்பெண்கள் அடிப்படையில் பெயர் பட்டியலுடன், தரவரிசை பட்டியல் (29.06.2016) அன்று வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கோணம், அரசு பொறியியல் கல்லூாரி வளாகத்தில் ரூ.7.25 கோடி செலவில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி கட்டுமான பணிகளையும், பால்குளம் என்ற இடத்தில் தமிழ்நாடு அரசு ரூ. 2.42 கோடி, மத்திய அரசு ரூ.2.42 கோடி, மனோன்மணியம் சுந்தரனாார் பல்கலை கழகம் 2.42 கோடி என மொத்தம் ரூ.7.25 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டுமான பணிகளையும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அப்போது அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் அடி தளம் 1551, முதல் தளம் 1529, இரண்டாவது தளம் சுமார் 600 ச.மீ (Sq.mtr) பரப்பளவிலும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகம் கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் அடி தளம் மற்றும் முதல் தளம் தலா 16700, இரண்டாவது தளம் 8000 ச.மீ (Sq.mtr) வகுப்பறைகள், நூலகம், தலைமையாசிரியர் அறை, கணினி அறைகள் ஆகியவற்றை அமைக்கப்படுகிறது என பொதுப்பணித்துறை அலுவலர்கள் தெரிவித்தார்கள். இப்பணிகளை விரைவில் முடித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

ஆய்வின் போது செயற்பொறியாள் பொறி. சேக் அப்துல்காதர் ஒலியுதீன், உதவி செயற்பொறியாளர் பொறி. விஜய ராஜன், உதவி பொறியாளர் பொறி. ஜெகநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.